பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

# இயேசு விடுவிக்கிறார்

Volume: 47 Issue: 02 February 2026 Mohan C. Lazarus Annual Subscription: ₹ 50/- Single Copy: ₹ 5/-




"...என்னை நோக்கிக் கூப்பிடு;

## நான் உன்னை விடுவிப்பேன்,..."

சங்கீதம் 50:15.

# உங்கள் சகோதரனிடமிருந்து...

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் **வாழ்த்துக்கள்!**

இந்த புது வருடத்தில், ஒரு மாதத்தை நாம் கடந்து வந்து விட்டோம். இம்மட்டும் கர்த்தர் நம்மை மிக அற்புதமாக காத்து நடத்தி வந்திருக்கிறார். அதற்காக **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

கர்த்தர் நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறபடி, உங்களுக்கு எந்தக் காரியம் வேண்டுமானாலும், **இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேளுங்கள், அற்புதங்களைக் காண்பீர்கள்!** இயேசு கிறிஸ்துவோடு நெருங்கி வாழும்படி, அவருடைய முகத்தை தேடுங்கள்! தேசத்திற்காக பரலோக கதவை தட்டுங்கள்!



கடந்த (2026) ஜனவரி மாதம் நடைபெற்ற, '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியங்களை எல்லாம் கர்த்தர் ஆசீர்வதித்தார். தேவ பிள்ளைகள் மீது அதிகமாக ஜெப அபிஷேகம் ஊற்றப்பட்டது! சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கர்த்தர் பலத்த அற்புதங்களை செய்தார். அதற்காக **கர்த்தரை துதியுங்கள்!**

நம்முடைய இந்த 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்கு விரோதமாக, துரைத்தனங்களின் ஆவிகளும், அதிகாரத்தில் கிரியை செய்கிற ஆவிகளும், மந்திரம் மற்றும் பில்லி-சூனிய ஆவிகளும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளும் பலமாக யுத்தம் செய்கின்றன. நாங்கள் அனுதினமும் போராடி ஜெபித்து ஜெபித்துத்தான் ஊழியங்களை நிறைவேற்றுகிறோம். நீங்களும் எங்களோடு இணைந்து, சத்துருவாகிய சாத்தானை எதிர்த்து நின்று போராடி ஜெபிக்க அன்போடு உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதம் நடைபெற இருக்கிற ஊழியங்களுக்காக **ஜெபியுங்கள். 50 கோடி பேருக்கு சுவிசேஷம்** அறிவிக்கும் ஊழியத் திட்டத்தை மிகுந்த ஜெபத்தோடு மிகவும் தீவிரமாக நிறைவேற்றி வருகிறோம். இதற்கென்று கோடிக்கணக்கான **கை பிரதிகள்** மற்றும் **சுவிசேஷப் புத்தகங்கள் அச்சடிக்கப்பட வேண்டும்**. இதனுடைய தேவைகள் பெரிது. ஆனால் கர்த்தரை மட்டுமே விசுவாசித்து, ஊழியக் காரியங்களை செய்து வருகிறோம். இதற்காக **உங்கள் ஜெபம் அதிகமாக தேவை**.

நாலுமாவடி-**தேவனுடைய கூடாரத்தில் தினமும் 2 சுகமளிக்கும் சுவிசேஷக் கூட்டங்கள்** நடைபெறுகிறது. அந்த கூட்டத்தில் கலந்து கொள்கிற மக்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்! அற்புத சுகத்தை பெறுகிறார்கள்! அதற்காக கர்த்தரை துதித்து, **ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!**

தொடர்ந்து **எனக்காக**, நம் 'இயேசு விடுவிக்கிறார்'-ஊழியக் குடும்பத்திற்காக **ஜெபியுங்கள்!**


தேவ கிருபை உங்களோடு கூட இருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.

# "...என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்,..."

சங்கீதம் 50:15.



பிரியமானவர்களே,

இப்பொழுதுதான் ஒரு புது வருடம் ஆரம்பித்ததைப்போல இருந்தது, அதற்குள் ஒரு மாதம் கடந்து போய் விட்டது! இந்த புது வருடத்தின் 2வது மாதத்தை காணச் செய்த **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்** உண்டாவதாக!

"இந்த மாதத்திலும் கர்த்தர் எனக்கு என்ன வாக்குத்தத்தம் வைத்திருக்கிறார்?" என்பதை அறிந்து கொள்ள நீங்கள் ஆவலோடு காத்திருக்கிறீர்கள் அல்லவா? இந்த மாத வாக்குத்தத்தத்திற்காக நான் தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபித்தபோது, "**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.**" (சங்கீதம் 50:15) என்று கர்த்தர் சொன்னார்.

கர்த்தர் இன்றைக்கு உங்களை பார்த்து, "என் மக(னே)ளே, **நீ என் நாமத்தை சொல்லி, என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்!**" என்று வாக்குக் கொடுக்கிறார். அப்படியானால், கர்த்தரை நோக்கி நீங்கள் கூப்பிடும்போது, நிச்சயமாக உங்களுக்கு விடுதலை உண்டாகும்!

இன்றைக்கு நீங்கள் எதோவொரு ஆபத்தான சூழ்நிலையின் மத்தியில் இருக்கலாம்! அது, 'வியாதி!' என்கிற ஆபத்தாக இருக்கலாம்! அல்லது, 'கடன் பிரச்சனை!' என்கிற ஆபத்தாக இருக்கலாம்! அல்லது, மனிதர்களால் உண்டாகிற ஆபத்தாக இருக்கலாம்! அல்லது, பிசாசினால் உண்டாகிற ஆபத்தாக இருக்கலாம்!

அல்லது, நீங்கள் வேலை செய்கிற இடத்தில், அல்லது தொழில் செய்கிற இடத்தில், அல்லது உங்கள் குடும்பக் காரியத்தில் எதோவொரு விதத்தில் ஆபத்தான ஒரு சூழ்நிலையின் மத்தியில் நீங்கள் இருக்கலாம்! "இந்த ஆபத்திலிருந்து எனக்கொரு விடுதலை கிடைக்குமா?" என்று நீங்கள் அங்கலாய்த்து கொண்டிருக்கலாம்!

எனக்கு அன்பானவர்களே, **பயப்படாதிருங்கள்!** ஏனென்றால், கர்த்தர் உங்களை பார்த்து, "என் மக(னே)ளே, **நீ பயப்படாதே! என்னை நோக்கி கூப்பிடு, நான் உனக்கு விடுதலை தருவேன்!**" என்று வாக்குக் கொடுக்கிறார். ஆகவே, அவரை நோக்கி கூப்பிட்டால் போதும், அவரிடத்திலிருந்து ஒரு பூரணமான விடுதலையை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்!

ஒருமுறை ஊழியத்தின் நிமித்தமாக நான் வட இந்தியாவிற்கு போயிருந்த சமயத்தில், அங்கு ஒரு தேவ ஊழியக்காரரை சந்தித்துப் பேசினேன். அவருடைய பெயர்,

கிறிஸ்தவ பெயராக இல்லை. நான் அவரிடத்தில், “பிரதர், நீங்கள் ஊழியம் செய்கிறீர்கள், சந்தோஷம்! ஆனால், உங்கள் பெயர் வித்தியாசமாக இருக்கிறதே! அது எப்படி?” என்று கேட்டேன்.

அதற்கு அவர், “பிரதர், நான் தமிழ்நாட்டிலுள்ள ஒரு பிராமணக் குடும்பத்தை சார்ந்தவன்!” என்று சொன்னார். நான் மிகவும் ஆச்சரியப்பட்டு, “ஒரு பிராமணக் குடும்பத்தை சார்ந்த நீங்கள் கையில் பரிசுத்த வேதாகமத்தை சுமந்து கொண்டு, கர்த்தருக்காக ஊழியம் செய்து கொண்டிருக்கிறீர்களே! எப்படி?” என்று கேட்டேன்.

இயேசு கிறிஸ்து சொல்கிறார்:
“என் மக(னே)ளே, நீ என்னை நோக்கி கூப்பிட்டால், உனக்கு தேவையான அற்புத சுகத்தையும், விடுதலையையும் நான் தருவேன்!”

அப்பொழுது, அவர் தன்னுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு காரியத்தை இப்படியாகச் சொன்னார்:

அவர் மிகவும் பக்தியுள்ள ஒரு ஆச்சாரமான பிராமணக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். ஆனால், நாளடைவில் அவருக்கு கடவுள் நம்பிக்கை அற்றுப் போய் விட்டது. அவர்களுடைய ‘மதம்’ சார்ந்த சடங்குகள், உபச்சாரங்கள் எதுவுமே அவருக்கு திருப்தியை கொடுக்கவில்லை.

“நம்முடைய நேரமும், பணமும்தான் வீணாகிறது. இவைகள் எல்லாம் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட வெறும் சம்பிரதாயங்கள்தானே!” என்று எண்ணி, கடைசியில், ‘கடவுளே இல்லை!’ என்கிற முடிவுக்கு வந்து, ஒரு நாத்திகனாகி விட்டார்!

அவர் நன்றாக படித்திருந்தபடியினால், வட இந்தியாவில் நல்லதொரு வேலை கிடைத்து, அங்கேயே தங்கி விட்டார். அவருக்கு திருமணமாகி மனைவி, பிள்ளைகள் இருந்தார்கள். திடீரென்று அவருடைய மனைவி வியாதிப்பட்டு படுக்கையிலாகி விட்டார்கள். தன் மனைவியை காப்பாற்ற அவர் எத்தனையோ மருத்துவமனைகளுக்கு கொண்டு சென்று, எவ்வளவோ பணம் செலவு செய்து சிகிச்சை செய்து பார்த்தும், வியாதியின் கொடூரம் அதிகமாகிக் கொண்டு இருந்ததே ஒழிய, சுகமாகவில்லை. ஒரு குறிப்பிட்ட நேரம் வந்தபோது, அவருடைய மனைவி மரணப் படுக்கையிலாகி விட்டார்கள்.

அந்த சூழ்நிலையில் அவர்தான் சமையல் பண்ண வேண்டும்! பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி அவர்களை பள்ளிக் கூடத்திற்கு அனுப்ப வேண்டும்! இதற்கு மத்தியில் தன் மனைவியையும் அவர் கவனிக்க வேண்டும். ஆனால், அதையெல்லாம் அவர் சந்தோஷமாகத்தான் செய்து கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில், தன் மனைவியின் மரணப் படுக்கை அவருடைய இருதயத்தை அதிகமாக பாதிக்க ஆரம்பித்தது. “இனி என் வாழ்க்கையும், என் பிள்ளைகளுடைய வாழ்க்கையும் எப்படி இருக்கப் போகிறதோ?” என்று நினைத்து, மிகவும் வேதனைப்பட்டார்.

ஒருநாள் வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து, தன் மனைவியின் படுக்கையருகில் அமர்ந்து, கண்களை மூடிக் கொண்டு, தன் மனைவியின் நிலைமையை எண்ணி மிகவும் வேதனைப்பட்டு, பல காரியங்களை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, திடீரென்று, “மகனே, நீ என்னை நோக்கிக் கூப்பிடு! உன் மனைவியை நான் சுகமாக்குவேன்!” என்கிற ஒரு சத்தம் அவருடைய காதுகளில் தொனித்தது.

உடனே அவர் கண்களை திறந்து சுற்றும் முற்றும் பார்த்தபோது, அங்கு யாருமே இல்லை. “யாரும் இல்லையே! ஒருவேளை மனப் பிரம்மையாக இருக்கும்!” என்று நினைத்து, மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தார்.

அப்போது மறுபடியுமாக, "மகனே, நான்தான் மெய்யான கடவுளாகிய இயேசு! நீ என் நாமத்தை சொல்லி, என்னை நோக்கி கூப்பிடு. அப்போது நான் உன் மனைவியை சுகமாக்கி, மரணப் படுக்கையிலிருந்து அவளுக்கு விடுதலையை கொடுப்பேன்!" என்கிற ஒரு சத்தத்தை அவர் கேட்டார்.

அவருக்கு ஒரே ஆச்சரியம்! கடவுள் இப்படியெல்லாம் பேசுவாரா? "கடவுள்!' என்பது, வெறும் கற்பனை! அது மனிதன் உண்டாக்கியது!' என்று நினைத்துக் கொண்டிருந்தேனே! இப்படியும் ஒரு கடவுள் இருக்கிறாரா? 'என்னை நோக்கி கூப்பிடு.' என்று சொல்கிறாரே! இது ஒரு மனிதனுடைய சத்தத்தைப்போல் இல்லையே! அசரீரியாக என் காதுகளில் நேரடியாக கேட்கிறதே!

'கடவுள்!' என்கிற ஒருவர் என் மன வேதனையை பார்த்து, என் மனைவிக்கு வியாதியிலிருந்து விடுதலை கொடுக்க வந்திருக்கிறார்!"



என்று சொல்லி, தன் மனைவியின் படுக்கையினருகில் முழங்கால்படியிட்டு, முதன்முறையாக, "இயேசுவே, என் மனைவிக்கு சுகம் கொடுங்கள்!" என்று ஒரு வார்த்தை சொல்லி வேண்டினார். அவருக்கு ஜெபிக்கத் தெரிந்தது அவ்வளவுதான்!

பாருங்கள்; "எப்பொழுது இவன் என்னை நோக்கி கூப்பிடுவான்? நாமும் அவனுடைய மனைவிக்கு அற்புத சுகத்தை கொடுத்து விடலாம்!" என்று ஆவலோடு காத்திருந்ததைப்போல, இயேசு கிறிஸ்து உடனே தம்முடைய வல்லமையை அனுப்பி, அவருடைய மனைவியின் மரணப் படுக்கையை மாற்றி, பூரண சுகத்தை கொடுத்தார்!

அப்பொழுது அவர், "கடவுள்!' என்று ஒருவரும் இல்லை!' என்று சொல்லிக் கொண்டிருந்தேன். **'இயேசு' என்கிற மெய்யான கடவுள் ஒருவர் இருக்கிறார்!** அவர் மனிதர்கள் மீது பேரன்பும், பாசமும், அக்கறையும் உள்ளவர்! ஆபத்தில் நமக்கு உதவி செய்து, நமக்கு விடுதலை கொடுக்கிறவர்!

அவர் என்னிடத்தில், 'எனக்கு இவ்வளவு பணம் கொடு! எனக்கு அதைச் செய்! இதைச் செய்!' என்று எதுவுமே கேட்கவில்லையே! '**என்னை நோக்கி கூப்பிடு, நான் விடுதலை தருவேன்.**' என்று சொல்லி, இலவசமாக என் மனைவிக்கு அற்புதமான சுகத்தை கொடுத்து விட்டாரே!" என்று சொல்லி, **இயேசு கிறிஸ்து ஒருவர்தான் உண்மையான கடவுள்** என்பதை அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டார்.

அந்த தேவ ஊழியர் என்னிடத்தில் சொல்லும்போது, "பிரதர், அந்த அற்புதமான சம்பவத்தின் மூலமாகத்தான் நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அவருக்கு ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்துக் கொண்டேன்." என்று மிகுந்த சந்தோஷமாக சொன்னார்.

எனக்கு அன்பானவர்களே, அதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றைக்கு உங்களை பார்த்தும், "என் மக(னே)ளே, நீ என் நாமத்தை சொல்லி, என்னை நோக்கி கூப்பிட்டால், உனக்கு தேவையான அற்புத சுகத்தையும், விடுதலையையும் நான் தருவேன்!" என்று சொல்கிறார்.

ஆனால், கர்த்தரை நாம் எப்படி கூப்பிட வேண்டும்? என்கிற சில காரியங்களை குறித்து, சற்று நாம் தியானிக்கலாம்.

# ஸ்தோத்திர பலியிட்டு கூப்பிடுங்கள்!



**"நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, ...ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்,..."** (சங்கீதம் 50:14,15) என்று கர்த்தர் சொல்கிறார்.

முதலாவது, கர்த்தருக்கு நாம் **ஸ்தோத்திர பலியிட்டு, அவரை நோக்கி கூப்பிட வேண்டும்**. அப்பொழுது கர்த்தர் நம்மை விடுவிப்பார்! இன்றைக்கு நம்மில் அனேகர், என்ன பிரச்சனையானாலும் கர்த்தரால் பயன்படுத்தப்படுகிற தேவ ஊழியக்காரர்களை தேடிப் போய், "ஐயா, நீங்கள் எனக்காக ஜெபம் பண்ணுங்கள்." என்று சொல்லி கேட்கிறார்கள்.

ஆனால் இயேசு கிறிஸ்து என்ன சொல்கிறார் என்றால், "மக(னே)ளே, நீ என்னை நோக்கி கூப்பிடு! நான்தானே உனக்காக மரித்தேன்? நான்தானே உன்னுடைய பாவ, சாபங்களை எல்லாம் சிலுவையில் சுமந்து முடித்தேன்? ஆகவே, நீ என்னை நோக்கித்தான் கூப்பிட வேண்டும். நீ என்னை கூப்பிட்டால், நான் உனக்கு விடுதலை, சுகம் தருவேன்!" என்று சொல்கிறார்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்திருந்த சமயத்தில், அனேகர் அவரை நோக்கிக் கூப்பிட்டு, அவரிடத்திலிருந்து அற்புதமான சுகத்தையும், விடுதலையையும் பெற்றுக் கொண்டார்கள்.

**குஷ்டரோகி** ஒருவன் இயேசு கிறிஸ்துவை நோக்கி கூப்பிட்டு, அற்புதமான சுகத்தை பெற்றுக் கொண்டான்! **(மத்தேயு 8:2,3)**.

யூதனல்லாத, **நூற்றுக்கு அதிபதி**யாக இருந்த ரோம அதிகாரி ஒருவன், திமிர்வாதத்தினால் கொடிய வேதனைப்பட்டுக் கொண்டிருந்த தன்னுடைய வேலைக்காரனுக்காக இயேசு கிறிஸ்துவினிடத்தில் வேண்டிக் கொண்டபோது, அந்த நொடிப் பொழுதே அந்த வேலைக்காரனுக்கு சுகத்தை கொடுத்தார்! **(மத்தேயு 8:6-13)**.



ஒரு சமயம், பரிசுத்த **பேதுரு** இயேசு கிறிஸ்துவை நோக்கி கடல் மீது நடந்து போய் கொண்டிருந்த சமயத்தில், சூழ்நிலையை பார்த்து பயந்து திடீரென்று கடலுக்குள் அமிழ்ந்தபோது, "ஆண்டவரே, என்னை இரட்சியும்!" என்று சொல்லி, இயேசு கிறிஸ்துவை நோக்கி கூப்பிட்டார். அப்பொழுது அவர் தம்முடைய கரத்தை நீட்டி பரிசுத்த பேதுருவின் கரத்தை பிடித்து தூக்கி இரட்சித்தார்! **(மத்தேயு 14:28-31)**.

புற ஜாதியாளான ஒரு **கானானிய ஸ்திரீ**, அசுத்த ஆவியின் போராட்டத்தினால் வேதனைப்பட்டு கொண்டிருந்த தன் மகளுக்காக, "இயேசுவே, தாவீதின் குமாரனே, என்னுடைய மகளுக்கு இரங்கும்!" என்று சொல்லி கூப்பிட்டபோது, இயேசு கிறிஸ்து அவளுடைய மகளுக்கு அற்புதமான விடுதலையை கொடுத்தார்! **(மத்தேயு 15:22-28)**.

ஒரு தகப்பன், பிசாசின் பிடியில் சிக்கி வேதனைப்பட்டு கொண்டிருந்த தன் மகனுக்காக, "இயேசுவே, என் மகனுக்கு இரங்கும்!" என்று சொல்லி, அவரிடத்தில் வேண்டிக் கொண்டபோது, அந்த மகனுக்கு அற்புதமான விடுதலையை கொடுத்தார்! **(மத்தேயு 17:14-18)**.

இப்படியாக, இயேசு கிறிஸ்து தன்னை நோக்கி கூப்பிட்ட யாவருக்கும் விடுதலையையும், சுகத்தையும் கொடுத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

இன்றைக்கு உங்களுக்கும் அவர் அற்புதம் செய்வார்! '**இயேசுவே...**' **என்று அவருடைய நாமத்தை சொல்லி**, **அவரை நோக்கி கூப்பிடுங்கள்**, அவ்வளவுதான்! **நீங்கள் அற்புதத்தை பெற்றுக் கொள்வீர்கள்!**

அப்படியாக நாம் அவரை நோக்கி கூப்பிடுகிற சமயத்தில், **ஸ்தோத்திர பலியிட்டு கூப்பிட வேண்டும்** என்று கர்த்தருடைய வார்த்தை நமக்கு சொல்கிறது. **(சங்கீதம் 50:14,15)**.

"கர்த்தருக்கு ஸ்தோத்திர பலியிட்டு...' என்றால், அது என்ன பலி? அதை எங்கே போய் செலுத்துவது?" என்றால், கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து, அவரை துதித்து, ஸ்தோத்திரம் சொல்வது என்று அர்த்தம். அதாவது, கர்த்தருக்கு நன்றி பலி செலுத்துவது!

**லாசரு** மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருந்த சமயத்தில், இயேசு கிறிஸ்து அவனுடைய கல்லறைக்கு முன்பாக வந்து நின்று, "...: **பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்.**" (யோவான் 11:41) என்று சொல்லி ஜெபித்தார் என்பதாக பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

அதாவது, "பிதாவே, இதற்கு முன்பு நான் ஜெபித்த போதெல்லாம், என் ஜெபத்திற்கு நீர் பதில் கொடுத்தீர். அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!" என்று சொல்லித்தான் தன்னுடைய ஜெபத்தை ஆரம்பித்தார்.

> **இது வரைக்கும் கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை எல்லாம் நினைத்துப் பார்த்து, அதற்காக அவருக்கு ஸ்தோத்திரம் சொல்லி, நன்றி பலி செலுத்த வேண்டும்.**

ஆகவே நாமும் அவரைப்போல, இது வரைக்கும் கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை எல்லாம் நினைத்துப் பார்த்து, அதற்காக அவருக்கு ஸ்தோத்திரம் சொல்லி, நன்றி பலி செலுத்த வேண்டும்.

நீங்கள் அப்படி செய்யும்போது, அவர் மீதுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுகிறீர்கள் என்று அர்த்தம். அந்த **விசுவாசம்தான், கர்த்தரிடத்திலிருந்து உங்களுக்கு அற்புதத்தை கொண்டு வரும்!**

எனவே, நாம் ஜெபிக்க ஆரம்பித்தவுடனேயே நம்முடைய காரியங்களை எல்லாம் கர்த்தரிடத்தில் சொல்லிக் கொண்டிருக்காதபடி, முதலாவது அவருக்கு ஸ்தோத்திர பலியிட்டு, அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும். அப்பொழுது கர்த்தர் அதை பார்த்து, நம்முடைய ஜெபத்திற்கு பதில் தருவார்!

# பொருத்தனை செய்து கூப்பிடுங்கள்!



"**நீ..., உன்னதமானவருக்கு** [கர்த்தருக்கு] **உன் பொருத்தனைகளைச் செலுத்தி; ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்,...**" [சங்கீதம் 50:14,15] என்று கர்த்தர் சொல்கிறார்.

எனக்கு அன்பானவர்களே, எந்தவொரு காரியத்திற்கும் பொருத்தனை பண்ணி நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் அந்த ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறவராக இருக்கிறார். **நாம் பொருத்தனை பண்ணினால், கட்டாயம் அதை நிறைவேற்றி விட வேண்டும்**. நிறைவேற்ற முடியாத பட்சத்தில், பொருத்தனை பண்ணவே கூடாது. அதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

சிலர் எதற்கெடுத்தாலும் பொருத்தனை பண்ணி ஜெபித்து, கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வார்கள். ஆனால், செய்த பொருத்தனையை நிறைவேற்ற மாட்டார்கள். தேவ சமூகத்தில் செய்த **பொருத்தனையை நிறைவேற்றாமல் இருந்தால், அது சாபமாகி விடும்!**

பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, '**அன்னாள்**' என்கிற ஒரு பெண்ணுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. அவள் தேவ சமூகத்தில் போய் மிகுந்த கண்ணீரோடு, "**சேனைகளின் கர்த்தாவே,...., உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனைபண்ணினாள்.**" 1 சாமுவேல் 1:11.

ஏனென்றால், அவள் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தபடியினால், மற்றவர்களுடைய நிந்தைகளுக்கும், அவமானங்களுக்கும் ஆளாகிப் போனாள். அதனால்தான் அவள் தேவ சமூகத்தில் கண்ணீர் சிந்தி அழுது, தன் மீது இருக்கிற நிந்தைகளும், அவமானங்களும் மாற வேண்டும் என்பதற்காக, தனக்கொரு குழந்தை பாக்கியத்தை தந்தால், அந்த குழந்தையை கர்த்தருக்கென்று கொடுத்து விடுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தாள். அவளுடைய அந்த ஜெபத்திற்கு கர்த்தர் உடனே பதில் கொடுத்து, அவள் மீதிருந்த நிந்தைகளையும், அவமானங்களையும் மாற்றும்படியாக அவளுக்கு குழந்தை பாக்கியத்தை கட்டளையிட்டு, ஒரு ஆண் பிள்ளையை கொடுத்தார்.

பாருங்கள்; அன்னாள், தான் தேவ சமூகத்தில் செய்த பொருத்தனையை மறக்காமல் நிறைவேற்றினாள். ஏற்ற வேளை வந்தபோது, அவள் மகனை கொண்டு போய், கர்த்தருடைய ஆலயத்தில் ஆசாரியனாக இருந்த, '**ஏலி**' என்கிற தேவ ஊழியக்காரரிடத்தில் ஒப்புவித்து, தன்னுடைய பொருத்தனையை சரியாக நிறைவேற்றினாள்.

சிலர் பொருத்தனை பண்ணி விட்டு, நாளடைவில் அதை மறந்து விடுவார்கள். அவ்வப்போது கர்த்தர் அதை அவர்களுக்கு

ஞாபகப்படுத்தினால் கூட, அதை அசட்டை பண்ணி விடுவார்கள். அப்படி இருக்கக் கூடாது. **பொருத்தனை பண்ணி விட்டால், கட்டாயம் அதை நிறைவேற்றியே ஆக வேண்டும்.**

அன்னாள் தேவ சமூகத்தில் செய்த பொருத்தனையை சரியாக நிறைவேற்றியபடியினால்தான், கர்த்தர் மறுபடியும் அவளுடைய கர்ப்பத்தை ஆசீர்வதித்து, அவளுடைய குடும்பத்தை பெரிதாக்கினார்.

"...**கர்த்தர் அன்னாளைக் கடாட்சித்தார்; அவள் கர்ப்பந்தரித்து மூன்று குமாரரையும் இரண்டு குமாரத்திகளையும் பெற்றாள்**; ..." [1 சாமுவேல் 2:21] என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

எனக்கு அன்பானவர்களே, **நீங்கள் பொருத்தனையை நிறைவேற்றினால் தான், தொடர்ந்து கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் உங்களுக்கு வரும்**. பொருத்தனையை நிறைவேற்றா விட்டால், கர்த்தர் மறுபடியும் உங்களை ஆசீர்வதிக்க முடியாது. உங்கள் நன்மையை நீங்களே இழந்து போவீர்கள். ஆகவே, பொருத்தனை பண்ணி ஜெபித்தால், அதை சரியாக நிறைவேற்றி விட வேண்டும்.

'**யாக்கோபு**' என்கிற ஒரு தேவ மனிதன், "...; **தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனைபண்ணிக்கொண்டான்**." [ஆதி. 28:22] என்பதாக பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வேத வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, 'தசம பாகம்' என்பது எதை குறிக்கிறது என்றால், கர்த்தர் நமக்கு கொடுக்கிற ஆசீர்வாதத்தில் பத்தில் ஒன்றை கர்த்தருக்கு கொடுப்பது. சில தேவ பிள்ளைகள் மாதா மாதம் சம்பளம் வாங்கியவுடன், அந்த சம்பளத்தில் பத்தில் ஒன்றை எடுத்து, கர்த்தருடைய காரியத்திற்கென்று கொடுத்து விடுவார்கள்.

அதேபோல, தொழில் மற்றும் வியாபாரம் செய்கிற சில தேவ பிள்ளைகள், மாதந்தோறும் தங்களுக்கு வருகிற வருமானத்தில் [இலாபத்தில்] பத்தில் ஒரு பாகத்தை எடுத்து, கர்த்தருடைய காரியத்திற்கென்று கொடுத்து விடுவார்கள். இதை சரியாக பின்பற்றக் கூடிய மக்கள்தான் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

வெறும் கையோடு போன **யாக்கோபு**, தான் செய்த பொருத்தனையை சரியாக நிறைவேற்றியபடியினால்தான் கர்த்தர் அவரை



ஆசீர்வதித்து, பெரிய செல்வந்தனாக திரும்பி வரப் பண்ணினார் என்பதாக பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. **[ஆதி. 32:10]**.

**ஒரு சமயம், ஒரு தம்பதியர் தங்களுடைய ஒரு வாலிப மகளையும் அழைத்துக் கொண்டு என்னை சந்திக்க வந்தார்கள். அப்போது அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை [காணிக்கை] கவருக்குள் வைத்து என்னிடத்தில் கொடுத்தார்கள். நான் அவர்களிடத்தில், "இதை என்ன காரியத்திற்காக என்னிடத்தில் கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டபோது, "ஐயா, என் மகளுக்கு வெகு நாட்களாக திருமணம் தடைப்பட்டுக் கொண்டே இருந்தது.**

**ஒருமுறை நீங்கள் பிரசங்கம் பண்ணும்போது, "கர்த்தருடைய இராஜ்ஜியத்தை கட்டுகிற காரியத்திற்காக பொருத்தனை பண்ணி ஜெபியுங்கள். அவர் உங்கள் காரியத்தை வாய்க்கப் பண்ணி, உங்களை ஆசீர்வதிப்பார்!" என்று சொன்னீர்கள்.**

அதைக் கேட்ட நாங்கள், "திருமணக் காரியத்திற்கென்று எத்தனையோ லட்ச ரூபாய் செலவு பண்ணுகிறோம். அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை எடுத்து, வட இந்தியாவில் ஆலயம் இல்லாத கிராமத்தில் ஆலயம் கட்டிக் கொடுக்கிற கர்த்தருடைய ஊழியக் காரியத்திற்காக கொடுக்கலாம்.' என்று பொருத்தனை செய்து ஜெபித்தோம்.

கர்த்தர் எங்கள் பொருத்தனை ஜெபத்தை கேட்டு, தடைகளை எல்லாம் நீக்கி, என் மகளுடைய திருமணக் காரியத்தை வாய்க்கப் பண்ணி விட்டார். ஆகவே, நாங்கள் பொருத்தனை பண்ணியபடி இந்த காணிக்கையை உங்களிடத்தில் கொடுக்க வந்தோம்." என்று சொன்னார்கள்.

பாருங்கள்; இது எவ்வளவு அழகான ஒரு பொருத்தனை!

சில தேவ பிள்ளைகள், "இயேசுவே, வியாதியிலிருந்து எனக்கொரு சுகத்தை தாரும்! நான் கூட்டத்தில் சாட்சி சொல்லி விடுகிறேன்!" என்று பொருத்தனை செய்வார்கள். இது செலவில்லாத பொருத்தனை!

**அன்னாள்** செய்த பொருத்தனை, தியாகமான ஒரு பொருத்தனை!

**யாக்கோபு** செய்த பொருத்தனை, '**பத்தில் ஒன்று கர்த்தருக்குரியது!**' என்று, தசம பாகத்தை அர்ப்பணிக்கிற பொருத்தனை!

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு நீங்கள் எப்படிப்பட்ட பொருத்தனை பண்ணி ஜெபிக்கிறீர்கள்? நீங்கள் பொருத்தனை பண்ணினால், கட்டாயம் அதை நிறைவேற்றி விட வேண்டும்.

பொருத்தனை ஏதும் பண்ணாமல் ஜெபித்தாலும், கர்த்தர் அற்புதம் செய்வார்! பொருத்தனை செய்துதான் ஜெபிக்க வேண்டுமென்று கட்டாயம் எதுவும் கிடையாது. ஆனால், பொருத்தனை பண்ணி ஜெபிப்பதில் ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் இருக்கத்தான் செய்கிறது!

அதாவது, கர்த்தரோடு நாம் ஒரு உடன்படிக்கை பண்ணி ஜெபிக்கிறோம். ஆகவே, நீங்கள் பொருத்தனை பண்ணும்போது, "அது கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் காரியத்திற்கு பிரயோஜனமாக இருக்குமா?" என்று யோசித்துத்தான் பொருத்தனை பண்ண வேண்டும்.

ஒரு சமயம், ஒரு குடும்பத்தார் 25 பரிசுத்த வேதாகமங்களை வாங்கிக் கொடுத்தார்கள். "எதற்காக இதை கொடுக்கிறீர்கள்?" என்று அவர்களிடத்தில் நான் கேட்டபோது, "ஐயா, திருமணமாகி இத்தனை வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருக்கிற எங்களுடைய மகளுக்கு கர்த்தர் ஒரு குழந்தை பாக்கியத்தை கொடுத்தால், 'புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிற ஒரு 25 பேருக்கு பரிசுத்த வேதாகமம் வாங்கிக் கொடுப்போம்.' என்று பொருத்தனை பண்ணி ஜெபித்தோம்.

கர்த்தர் ஜெபத்தை கேட்டு, எங்கள் மகளுடைய கர்ப்பத்தை ஆசீர்வதித்து, அவளுக்கு குழந்தை பாக்கியத்தை கொடுத்து விட்டார். அதற்கென்று நாங்கள் செய்த பொருத்தனையை நிறைவேற்றுவதற்காக இந்த பரிசுத்த வேதாகமத்தை கொடுக்க வந்திருக்கிறோம்." என்று சொல்லி கொடுத்தார்கள்.

எனக்கு அன்பானவர்களே, இப்படியாக அனேகர் கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்கடுத்த காரியத்திற்காக பொருத்தனை செய்து ஜெபித்து, ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்கிறார்கள்.

சுயநலமான பொருத்தனை அல்ல! செலவில்லாத பொருத்தனை அல்ல! நீங்கள் பொருத்தனை பண்ணி ஜெபிக்கும்போது, அது கர்த்தருடைய இராஜ்ஜியத்தை கட்டுகிற காரியத்தில் எந்த அளவிற்கு பிரயோஜனமாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்த்து, அதற்கேற்றபடி பொருத்தனை செய்து ஜெபியுங்கள். அப்படிச் செய்யும்போது கர்த்தர் உங்களுடைய ஜெபத்தை கனப்படுத்தி, உங்களை ஆசீர்வதிப்பார்!

# தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள்!



**"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்."** (சங்கீதம் 50:15) என்று கர்த்தர் சொல்கிறார்.

கர்த்தர் இன்றைக்கு உங்களை பார்த்து, "என் மக(னே)ளே, **நீ பயப்படாதே!** இக்கட்டிலிருந்து உன்னை நான் விடுதலையாக்குவேன்! ஆபத்திலிருந்து உன்னை நான் விடுதலையாக்குவேன்! கடன் பிரச்சனையிலிருந்து உன்னை நான் விடுதலையாக்குவேன்! வறுமையிலிருந்து உன்னை நான் விடுதலையாக்குவேன்! நெருக்கம், நிந்தை, அவமானத்திலிருந்து உன்னை நான் விடுதலையாக்குவேன்!" என்று கர்த்தர் சொல்லி விட்டார் என்றால், கட்டாயம் உங்களுக்கு விடுதலைதான்!

ஆனால், அதன் மூலமாக **கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒரு காரியம் இருக்கிறது**. அது என்னவென்றால், **நாம் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும்** என்று அவர் எதிர்பார்க்கிறார்.

"...; **நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.**" (சங்கீதம் 50:15) என்று கர்த்தர் சொல்கிறார்.

கர்த்தருக்கு நன்றி செலுத்தும் வண்ணமாக, அவர் நமக்குச் செய்கிற நன்மைகளை மறைத்து வைக்காதபடி, மற்றவர்களிடத்திலும் அதை நாம் சாட்சியாக எடுத்துச் சொல்லி, **கர்த்தருடைய நாமத்தை நாம் மகிமைப்படுத்த வேண்டும்**. கர்த்தர் நம் மீது வைத்திருக்கிற நம்பிக்கை அதுதான். "நீ என்னை மகிமைப்படுத்துவாய்!" என்று, கர்த்தர் நம்மை நம்பிச் சொல்கிறார். அதற்காக நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது கர்த்தருடைய உள்ளம் சந்தோஷப்படும்.

மட்டுமல்ல, நாம் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிற பட்சத்தில், தொடர்ந்து அவர் உங்களுக்கு அற்புதங்களை செய்து, உங்களை ஆசீர்வதிப்பார்.

சிலர் எதாவதொரு ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டதோடு, கர்த்தரை மகிமைப்படுத்தாமல் அப்படியே இருந்து விடுவார்கள். கர்த்தரை அவர்கள் மகிமைப்படுத்தாததினால், "நன்றியில்லாத இவர்களை இன்னும் நான் ஆசீர்வதித்து என்ன பிரயோஜனம்?" என்று, கர்த்தர் அமைதியாக இருந்து விடுவார்.

எனக்கு அன்பானவர்களே, கர்த்தர் நம்மிடத்தில் வேறு என்னத்தை கேட்கிறார்? அவர் பொன்னையோ, பொருளையோ, பணத்தையோ, நம்முடைய சொத்துக்களையோ, வேறு எதையுமே நம்மிடத்தில் கேட்கவில்லையே!

> **கர்த்தருக்கு நன்றி செலுத்தும் வண்ணமாக, அவர் நமக்குச் செய்கிற நன்மைகளை மற்றவர்களிடத்தில் சாட்சியாக சொல்லி, கர்த்தருடைய நாமத்தை நாம் மகிமைப்படுத்த வேண்டும்.**

"நான் உனக்கு செய்கிற நன்மைகளை, நீ என்னிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிற ஆசீர்வாதங்களை மற்ற மக்களுக்கும் எடுத்துச் சொல்லி, என் நாமத்தை மகிமைப்படுத்து!" என்றுதானே சொல்கிறார்! அதைக் கூட நம்மால் செய்ய முடியாதா?

எனக்கு அன்பானவர்களே, **மற்ற மக்களும் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ளும்படி**யாக, **கர்த்தர் உங்களுக்கு செய்கிற நன்மைகளை, ஆசீர்வாதங்களை அவர்களிடத்தில் சாட்சியாக சொல்லி**, கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற அவருடைய மன விருப்பத்தின்படி, **அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள்**. அப்போது கர்த்தர் உங்களுக்கு இன்னும் அனேக அற்புதங்களை செய்து, உங்களை ஆசீர்வதிப்பார்!

**விசுவாசத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்:**



நல்ல தகப்பனே, **சங்கீதம் 50:15**ன்படி, இந்த மாதம் நீர் எங்களுக்கு கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

என் ஜெபங்களை எல்லாம் கேட்டு அற்புதங்களை செய்து, நீர் எனக்கு கொடுக்கிற விடுதலைக்காக, சுகத்திற்காக, ஆசீர்வாதங்களுக்காக, கோடான கோடி ஸ்தோத்திர பலிகளை உமக்கு நான் செலுத்துகிறேன்!

நான் உம்மிடத்தில் செய்த பொருத்தனைகளை செலுத்த நீர் எனக்கு கொடுத்த கிருபைக்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

மற்ற மக்களும் உம்முடைய அன்பை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, நீர் எனக்கு செய்கிற நன்மைகளை அவர்கள் மத்தியில் நான் சாட்சியாக சொல்லி, உம்முடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்த எனக்கு கிருபை தருவீராக!

இதன் நிமித்தமாக. இன்னும் உம்முடைய ஆசீர்வாதங்கள் என்னிலும், என் குடும்பத்திலும், என் கையின் பிரயாசங்களிலும் பெருகுவதாக!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்! ஆமென்!



# 2025 - பண்டிகை நாட்களில், ஏழை-எளிய மக்கள் மத்தியில் வெளிப்படுத்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் அன்பு!



கடந்த 2025 டிசம்பரில், கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில் சுமார் **25,000**க்கும் அதிகமான ஏழை-எளிய மக்களுக்கு **உங்கள் சார்பாக** அனேக **நற்கிரியை**களை செய்து, **கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த** கர்த்தர் உதவி செய்தார்.





## நாலுமாவடியில்...

டிச., 19ம் தேதியன்று காலையில் தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுமார் **3,500**க்கும் அதிகமான **மாற்றுத் திறனாளி**கள், **உத்தம விதவை**கள் கூடுகையின் பயனாளர்கள் மற்றும் **தேவனுடைய பண்டகசாலை பயனாளர்**களுக்கு **நற்செய்தி** அறிவித்து, **புத்தாடை**கள் வழங்கி, கிறிஸ்துமஸ் **விருந்து** கொடுக்கப்பட்டது. நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், **50 மாற்றுத் திறனாளிகளுக்கு** வேண்டிய **உபகரணங்களை** வழங்கினார்கள்.

அன்று மாலையில் **கிறிஸ்துமஸ் விழா** நடத்தப்பட்டு, சுமார் **5,000 ஏழைகள்** மற்றும் **விதவை**களுக்கு **நமது சகோதரர்**, சகோதரி **ஜாய்ஸ் லாசரஸ்** மற்றும் சகோதரி **ஆஷ்லி எபநேசர்** ஆகியோர் **புத்தாடை**கள் மற்றும் கிறிஸ்துமஸ் **கேக்** வழங்கினார்கள்.





டிச., 24ம் தேதியன்று **தூய்மைப் பணியாளர்**களுக்கு **புத்தாடை**கள் வழங்கி, கிறிஸ்துமஸ் **பரிசு**ம் கொடுக்கப்பட்டது.



டிச., 25ம் தேதி கிறிஸ்துமஸ் தினத்தன்று, நாலுமாவடியை சுற்றியுள்ள கிராமங்களை சார்ந்த சுமார் **3,000** ஏழை மக்களுக்கு தேவனுடைய கூடாரத்தில் **கிறிஸ்துமஸ் விருந்து** அளிக்கப்பட்டது. இதில் நமது சகோதரர் அவர்கள் வந்திருந்த மக்களுக்கு உணவு பரிமாறி, அவர்களோடு அமர்ந்து உணவருந்தி, எல்லா சிறு பிள்ளைகளுக்கும் கிறிஸ்துமஸ் வெகுமதியளித்து, கிறிஸ்து பிறப்பை கொண்டாடினார்கள்.

அன்றைய தினம் (வியாழக்கிழமை) நடைபெற்ற கிறிஸ்துமஸ் **சிறப்பு அற்புத விடுதலைப் பிரார்த்தனை** கூட்டத்திற்கு வந்திருந்த சுமார் **6,000** மக்களுக்கு சிறப்பு **விருந்து** வழங்கப்பட்டது.

## மதுரை–புது வாழ்வு மறு சீரமைப்பு திட்டத்தின் மூலமாக...

கடந்த 2025 டிச., 1 முதல், 8ம் தேதிவரை, மதுரை பட்டணத்திலுள்ள **பெரியார் நகர்**, **கூடல் நகர்**, **சக்கிமங்கலம்** ஆகிய பகுதிகளில் புது வாழ்வு மறு சீரமைப்பு திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் **தெருவோர வாழ் மக்கள்**, **நரிக் குறவர்கள்**, **தர்மம்**



**எடுத்துப் பிழைப்பவர்கள்**, **பாலியல் தொழிலாளிகள்**, தங்களையே **சாட்டையினால் அடித்து**க் கொண்டு **தர்மம் எடுத்துப் பிழைப்பவர்கள்**, **'பூம்–பூம்' மாட்டுக்காரர்கள்**, **சிறை வாழ் மக்கள்** மற்றும் **திருநங்கையர்கள்** என, சுமார் **3,000** ஏழை மக்களுக்கு கிறிஸ்து பிறப்பின் **நற்செய்தி** அறிவிக்கப்பட்டு, **கிறிஸ்துமஸ் வெகுமதி**யும், **உணவு**ம் வழங்கப்பட்டது.

தங்களையே **சாட்டையினால் அடித்துக் கொண்டு தர்மம் எடுத்துப் பிழைக்கிற**, சுமார் **1,000** குடும்பங்களுக்கு **நேரடியாக சென்று இனிப்பு** வழங்கி, கிறிஸ்துமஸ் **வாழ்த்துக்கள்** தெரிவிக்கப்பட்டது.

## சேலம்–கருமந்துறையில்...

டிச. 11ம் தேதியன்று, **சேலம்**–கல்வராயன் மலைப் பகுதியில் அமைந்துள்ள **கருமந்துறை**யில் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த **200**க்கும் அதிகமான



**மலை வாழ் மக்கள்** மற்றும் **மாற்றுத் திறனாளிகளுக்கு** கிறிஸ்து பிறப்பின் **நற்செய்தி** அறிவித்து, **புத்தாடை**கள் வழங்கி, கிறிஸ்துமஸ் **விருந்து** கொடுக்கப்பட்டது.

## திருச்சி மாநகரில்...

டிச., 12,13,14 தேதிகளில் **திருச்சி** பட்டணத்திலுள்ள **தென்னூர்**, **சிறுகனூர்**, **முசிறி** ஆகிய பகுதிகளில் வசிக்கும் **தெருவோர வாழ் மக்கள்**, **நரிக் குறவர்கள்**, **தர்மம் எடுத்துப்**



**பிழைப்பவர்கள்**, **பாலியல் தொழிலாளர்**கள் ஆகிய ஏழை மக்களுக்கு கிறிஸ்து பிறப்பின் **நற்செய்தி** அறிவித்து, கிறிஸ்துமஸ் **வெகுமதி** வழங்கி, **விருந்து**ம் கொடுக்கப்பட்டது.

## சென்னை–புது வாழ்வு மறு சீரமைப்பு திட்டத்தின் மூலமாக...

கடந்த 2025 டிச., 11 முதல், 15ம் தேதிவரை **சென்னை**யிலுள்ள **இராயபுரம்**, **மைலாப்பூர்**, **எழும்பூர்**, **தேனாம்பேட்டை**, **தண்டையார்பேட்டை**, **சிந்தாதிரிப்பேட்டை** ஆகிய இடங்களில் சுமார் **5,000** ஏழை மக்களுக்கு **நற்செய்தி** அறிவித்து, **புத்தாடை**களும், **பரிசு**களும் வழங்கப்பட்டது.



## கீழ மாதாபுரம்–ஜெப மலையில்...

டிச., 20ம் தேதியன்று தென்காசி மாவட்டம்–**கீழ மாதாபுரத்தில்** அமைந்துள்ள **ஜெப மலை**யில் சுமார் **2,000 விதவை**கள், சுமார் **500 மாற்றுத்**



**திறனாளி**கள் மற்றும் **கைவிடப்பட்ட** சுமார் **300 சிறு பிள்ளை**களுக்கு **புத்தாடை**யும், **விருந்து**ம் வழங்கப்பட்டது.

விசேஷமாக, **20 மாற்றுத் திறனாளி**களுக்கு Wheel Chair, **தையல் இயந்திரங்கள்**, **ஊன்றுகோல்கள்**, **மாவு அரைக்கும் இயந்திரம்** (Grinder) வழங்கப்பட்டது.

மட்டுமல்ல, நமது '**இயேசு விடுவிக்கிறார்**'–**சிறுவர்**, **வாலிபர்** மற்றும் **பெண்கள்** ஊழியத் துறை சார்ந்த தேவ ஊழியர்கள், **திருப்பூர்**, **இராமேஸ்வரம்**, **சேலம்**, **நாமக்கல்**, **புதுக்கோட்டை** ஆகிய பகுதிகளில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தி, ஏழை மக்களுக்கு **புத்தாடை**களை வழங்கி, இயேசு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தினர்.

## பேய்குளம்–புனித லூக்கா தொழு நோய் மருத்துவமனையில்...



டிச., 22ம் தேதியன்று, **பேய்குளம்**–புனித லூக்கா தொழு நோய் மருத்துவமனையிலுள்ள **200 தொழு நோயாளி**களுக்கு **புத்தாடை**கள் வழங்கி, **விருந்தும்** கொடுக்கப்பட்டது.

## நல்ல சமாரியன் கிளப்புகள் மூலமாக...



இதுவரை தமிழகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கிற **94** 'இயேசு விடுவிக்கிறார்'–**நல்ல சமாரியன் கிளப்பு**கள் மூலமாக சுமார் **150**க்கும் அதிகமான கிறிஸ்துமஸ் **நிகழ்ச்சி**கள் நடத்தப்பட்டு, ஏழை–எளிய மக்களுக்கு அனேக கிறிஸ்துமஸ் **உதவிகள்** வழங்கப்பட்டது.

இப்படியாக, கடந்த 2025ம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில் சுமார் **25,000** ஏழை–எளிய மக்களுக்கு **உங்கள் சார்பாக நற்கிரியை**கள் செய்து, அதன் மூலமாக **கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த** கர்த்தர் கிருபை செய்தார்.

"**பண்டிகை நாட்களில் ஏழைகளை நினைத்துக் கொள்ளுங்கள்!**" என்று அழைப்பு விடுத்தபோது, நீங்கள் உதாரத்துவமாக கொடுத்து உதவினீர்கள். கணக்கு வைக்கும் **கர்த்தர்**, **இதற்குரிய பலனை பல மடங்காக உங்களுக்கு திருப்பிக் கொடுப்பார்!** பரலோகத்திலும் உங்கள் பலன் மிகுதியாக இருக்கும்!

**உங்கள் நன்கொடைகளை அனுப்ப...**

**இந்தியாவில் உள்ளவர்களுக்கு...**

| | |
|---|---|
| A/c Name: | NEW LIFE SOCIETY |
| A/c No: | 054 100 710 400 513 |
| Bank: | TAMILNAD MERCANTILE BANK LTD., |
| Branch: | Prahasapuram |
| Branch Code: | 000054 |
| IFS Code: | TMBL0000054 |

**குறிப்பு: வெளி நாடுகளில் வசிக்கிற தேவ பிள்ளைகள்**, இந்த **நலத் திட்டப் பணிகளுக்கு** நன்கொடைகளை அனுப்ப ஏவப்பட்டால், **+91 890 383 5315** என்கிற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

Pay through UPI
NEWLIFESOC@SBI

உங்கள் நன்கொடைகளுக்கு (இந்திய குடிமக்களுக்கு மட்டும்) 80Gயின் வருமான வரி விலக்கு உண்டு

ADDRESS: NEW LIFE SOCIETY, Main Road, Nalumavadi-628 211, Thoothukudi Dt., India.
Ph: 890 383 5315. Web: www.newlifesociety.in Email: info@newlifesociety.in

# 'இயேசு விடுவிக்கிறார்' மிஷனெரி ஊழியங்கள்!

**சு**மார் 146 **கோடி** மக்கள் தொகை கொண்ட **இந்திய தேசத்தில், 45 சதவிகித மக்களுக்கு இன்னும் சுவிசேஷம் சென்றடையவில்லை!**" என்றும், சுமார் 6.65 **லட்சம் கிராமங்களை** கொண்ட இந்த தேசத்தில், "**4 லட்சம் கிராமங்களில் தேவாலயங்கள் இல்லை!**" என்றும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.



"..., **நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி,... அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும்...அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்.**" [மத்தேயு 28:19,20] என்ற உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்படிந்து, இந்திய தேசத்திலுள்ள எல்லா மக்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்க, நமது '**இயேசு விடுவிக்கிறார்'-மிஷனெரி ஊழியம்** மிகுந்த ஜெபத்தோடு செயல்பட்டு வருகிறது.

## மிஷனெரி ஊழியம்!

இதுவரை 80 **மிஷனெரி ஸ்தாபனங்கள்** மூலமாக, **வட இந்தியாவில்** 896 **மிஷனெரி**களையும், 480 **மிஷனெரிகளின் பிள்ளை**களையும், **தமிழ்நாட்டில்** 500 **மிஷனெரி**களுமாக, இதுவரை **மொத்தம்** 1,396 மிஷனெரிகளை நாம் **தாங்கி வருகிறோம்**.

தேவாலயம் இல்லாத கிராமங்களில் தேவாலயங்களை கட்டிக் கொடுத்து, மிஷனெரிகள் ஊழியம் செய்வதற்கு தேவையான 4 Wheeler, 2 Wheeler, Cycle, Projector, Sound System ஆகியவைகளை வாங்கி கொடுத்து, அவர்களை ஊழியத்தில் உற்சாகப்படுத்தி வருகிறோம்.

புதிதாக இரட்சிக்கப்படுகிற 'பீல்' ஆதிவாசி இன மக்களுக்கு **அவர்கள் பேசுகிற மொழியிலேயே பரிசுத்த வேதாகமம்** கொடுக்கப்பட்டு, அவர்கள் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தப்பட்டு வருகிறார்கள்.

மட்டுமல்ல, அங்குள்ள ஏழை-எளிய மக்களுக்கு **தையல் மிஷின்** மற்றும் **சிறு தொழில் செய்வதற்கான உபகரணங்கள்** வாங்கிக் கொடுத்து, அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு தேவையான சில அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கிறோம்.



வாங்கி கொடுக்கப்பட்ட Sound System

## தேவாலயங்கள்!

சில வட இந்திய மிஷனெரி பணித் தளங்களில் இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகள் கூடி கர்த்தரை ஆராதிக்க, 'இயேசு விடுவிக்கிறார்'-மிஷனெரி ஊழியத்தின் மூலமாக **தேவாலயங்களை கட்டி கொடுத்து** வருகிறோம்.

இதுவரை மொத்தம் 626 **தேவாலயங்கள் கட்டுவதற்கு உதவி செய்துள்ளோம்**. இதில், 463 **தேவாலயங்கள்** கட்டி முடிக்கப்பட்டு, **பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது**. தற்போது 163 **தேவாலயங்களின் கட்டுமானப் பணி**கள் நடைபெற்று வருகிறது.



'ஷாலோம்' - பேராயர், Rt. Rev. தேவதாஸ் அவர்களோடு நமது சகோதரர்கள்

மட்டுமல்ல, ஏற்கெனவே பல இடங்களில் ஆராதனை நடைபெற்று வருகிற தேவாலயங்களில் புதிதாக இரட்சிக்கப்படுகிற ஆத்துமாக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறபடியினால், அப்படிப்பட்ட பல தேவாலயங்கள் பெரிய அளவில் விஸ்தாரமாக்கப்பட்டு வருகிறது.



புதிதாக கட்டி கொடுக்கப்பட்ட தேவாலயம்

## தமிழ்நாட்டில் கிராம மிஷனெரி ஊழியங்கள்!

**விருதுநகரை** மையமாக வைத்து செயல்பட்டு வருகிற, **கிராம மிஷனெரி இயக்கம் (VMM)** மூலமாக, தமிழ்நாட்டிலுள்ள அனேக **கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு** வருகிறது. நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின் சார்பாக, மாதந்தோறும் **500 மிஷனெரிகளை தாங்கி வருகிறோம்.**

அவர்களுக்கு ஏற்கெனவே **4 TATA Magic வாகனங்கள்** வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. மட்டுமல்ல, நமது ஊழியத்தின் சார்பாக **மாதந்தோறும் லட்சக்கணக்கான கைப் பிரதிகளும்** அச்சடித்து கொடுத்து வருகிறோம்.

இந்த ஊழியத்தின் மூலமாக தமிழ்நாட்டிலுள்ள சுமார் **6,120**க்கும் அதிகமான **கிராமங்களில்** லட்சக்கணக்கான மக்களுக்கு **சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது.**



4 TATA Magic வாகனங்கள் வழங்கப்பட்டது

அது மட்டுமல்லாமல், விருதுநகர் மாவட்டத்தில் **மிஷனெரிகள் தங்கி ஊழியம் செய்வதற்கு** வசதியாக, சுமார் ₹ **20,00,000** செலவில் **Missionary Residential Hostel** கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

## பிஹார் மாநிலம்–ரோத்தாஸ் மலைப் பகுதியில்...

பிஹார் மாநிலம்–**ரோத்தாஸ்** மாவட்டத்திலுள்ள மலைப் பகுதியில் மின்சாரம், சாலை வசதி, வசிப்பதற்கு வீடு என்று, எந்தவொரு அடிப்படை வசதிகள் கூட இல்லாத இடங்களில், **'GEMS'** மிஷனெரி ஸ்தாபனத்தின் மூலமாக மிஷனெரிகள் சுவிசேஷம் அறிவித்து வருவதோடு, அங்குள்ள மக்களுக்கு அனேக **நற்பணி**களைச் செய்து கொடுத்து, அங்குள்ள பிள்ளைகளுக்கு **கல்வி**யும் கற்றுக் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின் சார்பாக ஊழியத்திற்கான சில உதவிகளையும் செய்ய ஜெபத்தோடு திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறோம்.

மேலும், அந்த பகுதிகளில் ஊழியம் செய்து வருகிற **சில மிஷனெரிகளை**யும், ஆதிவாசி இன **பிள்ளைகளை**யும் நமது ஊழியத்தின் மூலமாக **தாங்கி வருகிறோம்.**

அந்த பகுதிகளில் மின்சாரம் இல்லாத காரணத்தினால், **'GEMS'** மிஷனெரி ஸ்தாபனத்தின் மூலமாக அங்கு செயல்பட்டு வருகிற ஒரு பள்ளிக் கூடத்திற்கு, சுமார் ₹ **40,00,000** மதிப்பில் **Solar Power Plant** அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.



Solar Power Plant அமைத்துக் கொடுக்கப்பட்டது



60 சைக்கிள்கள் வழங்கப்பட்டது

கிழக்கு பிஹார் பகுதியில் **Harvest Apostalic Ministries** சார்பாக மிஷனெரி ஊழியங்கள் நடைபெற்று வருகிறது. அந்த மிஷனெரிகள் கிராமங்கள்தோறும் சென்று ஊழியம் செய்வதற்கு உதவியாக **60 சைக்கிள்**கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியிலுள்ள மக்கள் கூட்டங்களை நடத்துவதற்கு வசதியாக, சுமார் ₹ **20,00,000** செலவில் **Multi-Purpose Hall** கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

## மேற்கு இந்தியாவுக்கு சுவிசேஷம்!

**இராஜஸ்தான்**, **மத்தியப் பிரதேசம்** மற்றும் **குஜராத்** ஆகிய மாநிலங்களில் '**பீல்**' ஆதிவாசி இன மக்கள் மத்தியில் '**ஷாலோம்**'-மிஷனெரி ஊழியத்தின் மூலமாக **சுவிசேஷ ஊழியம்** நடைபெற்று வருகிறது. இதன் மூலமாக லட்சக்கணக்கான 'பீல்' ஆதிவாசி இன மக்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்து வருகிறார்கள்.

அடுத்தபடியாக, வருகிற 5 ஆண்டுகளில் (2026-2030), இந்த 3 மாநிலங்களிலுள்ள மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க மிகத் தீவிரமாக செயல்பட்டு வருகிறோம். இந்த 3 மாநிலங்களை சார்ந்த திருச்சபைகள், சுதேச ஊழியங்கள் மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களில் இருக்கிற தேவ ஊழியக்காரர்களிடத்தில் தேவ தரிசனத்தை பகிர்ந்து கொண்டு, அவர்களோடு இணைந்து சுவிசேஷத்தை அறிவிக்க திட்டமிட்டு, அதற்காக செயல்பட்டு வருகிறோம்.

இதன் முதல் கட்டமாக, மிஷனெரிகளுக்கு **2 சக்கர வாகனங்கள்** வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாக, இந்த 3 மாநிலங்களிலுள்ள சிறந்த தேவ ஊழியர்களை தெரிந்தெடுத்து, அவர்களுக்கு **ஊழியப் பயிற்சி** கொடுக்கப்பட்டுள்ளது.

'பீல்' ஆதிவாசி இன பிள்ளைகளுக்கு **கல்வி**யை கொடுக்க வேண்டும் என்பதற்காக, இராஜஸ்தான் மாநிலம்-**Khunta Chatra** என்கிற ஒரு கிராமத்தில், '**ஷாலோம்**'-மிஷனெரி ஊழிய ஸ்தாபனத்தின் சார்பாக ஒரு **பள்ளிக் கூடம்** இயங்கி வருகிறது. அங்கு பிள்ளைகள் தங்கிப் படிப்பதற்காக ₹ **45,00,000** செலவில் ஒரு **விடுதி** (Hostel) கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.



2 சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டது



விடுதி மாணவர்கள்



விடுதி கட்டிக் கொடுக்கப்பட்டது

## கிழக்கு இந்தியாவுக்கு சுவிசேஷம்!



வருகிற 5 ஆண்டுகளில் (2026-2030) கிழக்கு இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்க தீர்மானிக்கப்பட்டு உள்ளது. அதன் அடிப்படையில் **பிஹார், ஜார்கண்ட், ஒடிசா, சட்டீஸ்கர்** மற்றும் **மேற்கு வங்காளம்** ஆகிய மாநிலங்களுக்கு தீவிரமாக நற்செய்தி அறிவிப்பதற்கு திட்டமிட்டு, சுவிசேஷமும் அறிவிக்கப்பட்டு வருகிறது. சில மிஷனெரி ஸ்தாபனங்களிலுள்ள **84 மிஷனெரிகள் முழு நேரமாக** இந்த ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

மட்டுமல்ல, இதற்காக ஒவ்வொரு மாதமும் **லட்சக்கணக்கான கைப் பிரதி**களும், **சுவிசேஷப் புத்தகங்களும்** அச்சடிக்கப்பட்டு வருகிறது. இதற்கென்று ஒவ்வொரு மாதமும் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது.

இந்த உன்னதமான ஊழியத் திட்டத்தில் நீங்களும் இணைந்து இதற்காக ஜெபிக்கவும், **கைப் பிரதிகள் அச்சடிக்கிற காரியத்திலும், மிஷனெரிகளுக்காக கொடுத்து தாங்குகிற காரியத்திலும் உதவி செய்யலாம்.**

நாம் இணைந்து செயல்பட்டால், வருகிற 2030ம் ஆண்டிற்குள் 50 கோடிகளுக்கும் அதிகமான ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து, தேவ திட்டத்தை நிறைவேற்றலாம்.

## இந்த ஊழியத்தின் தற்போதைய தேவைகள்...



இந்த 3 மாநிலங்களிலும் இன்னும் தீவிரமாக சுவிசேஷம் அறிவிக்க, **3 Tempo Travallers** கொடுக்கவும், அந்தந்த மாநில மொழிகளில் **கோடிக்கணக்கான சுவிசேஷ புத்தகங்கள், கைப் பிரதிகள் அச்சடிக்கப்படவும் வேண்டியுள்ளது.**



உங்கள் **ஜெபத்தினாலும், காணிக்கைகளினாலும் இந்த மிஷனெரி ஊழியங்களை தாங்க**, உங்களை மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

வட இந்திய மாநிலங்களில் நடைபெற்று வருகிற இந்த **மிஷனெரி ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்**. ஆவியானவர் உங்களை ஏவினால், உங்கள் **குடும்பத்தின் சார்பாகவோ**, அல்லது உங்கள் **நிறுவனத்தின் சார்பாகவோ ஒரு மிஷனெரியை தாங்கலாம்**. அல்லது, **ஒரு தேவாலயம் கட்டிக் கொடுக்கலாம்**.

### அதன் விபரங்கள்:

| | |
|---|---|
| **ஒரு மிஷனெரியை தாங்க (மாதந்தோறும்)**.................................. | : ₹ 4,000/- |
| **ஒரு 'பீல்' ஆதிவாசி இன பிள்ளையை தாங்க (மாதந்தோறும்)**........................ | : ₹ 1,000/- |
| **ஒரு சிறிய தேவாலயம் கட்ட**................ | : ₹ 5,00,000/- |
| **ஒரு பெரிய தேவாலயம் கட்ட**................ | : ₹ 7,00,000/- |


**காணிக்கை அனுப்ப நீங்கள் ஏவப்பட்டால், கீழ்கண்ட எமது வங்கிக் கணக்கில் அனுப்பலாம்.**

| | |
|---|---|
| A/C NAME | : JESUS REDEEMS MISSIONARY MINISTRY |
| A/C NO. | : 27400 2000 000076 |
| BANK | : INDIAN OVERSEAS BANK |
| BRANCH CODE | : 2740 |
| BRANCH | : ANGAMANGALAM, KURUMBUR |
| SFC NO. | : IOBA0002740 |
| SWIFT CODE | : IOBAINBB100 |

கொடுத்து தாங்கி, தேவ இராஜ்ஜியத்தை கட்டியெழுப்ப முன் வாருங்கள்.

**பரலோகத்தில் இதற்கான உங்களுக்குரிய பலன் மிகுதியாக இருக்கும்!** – உங்கள் சகோதரன்.

தொடர்புக்கு: Jesus Redeems Missionary Ministry, Nalumavadi-628211, Thoothukudi Dt., T.N., India.
Mobile/WhatsApp: +91 83444 23000. E-Mail: missionary@jesusredeems.org



**"...என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்,..."**

சங்கீதம் 50:15.

## நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

உங்களுக்கு ஒரு விடுதலை தேவை! உங்கள் விடுதலைக்காக ஜெபிக்கவே, திறப்பின் வாசல் ஜெபத்தை கர்த்தர் ஏற்படுத்தி இருக்கிறார். கடந்த நாட்களில் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தினால், அனேகர் கர்த்தரிடத்திலிருந்து அற்புதமான விடுதலை மற்றும் சுகத்தை பெற்றார்கள். அவர்களில் சிலரது அனுபவங்களை பாருங்கள்:

### சர்ப்பத்தின் ஆவி வெளியேறி விடுதலை!



எனக்குள் இருந்த ஒரு **சர்ப்பத்தின் ஆவி** அடிக்கடி என்னை அலைக்கழித்துக் கொண்டே இருந்தது. விடுதலைக்காக நான் ஜெபித்து கொண்டிருந்தபோது, ஒரு தேவ வல்லமை என்னை ஆட்கொண்டது. அப்பொழுது எனக்குள் இருந்த அந்த **ஆவி வெளியேறிப்** போனதை நான் பார்த்தேன். அன்றுமுதல், நான் **முழு விடுதலை**யோடு இருக்கிறேன். – **கிறிஸ்டி**, சென்னை.

### (12 வருட) மூல வியாதி சுகமானது!



**மூல வியாதி**யினால் சுமார் **12 வருடங்களாக** மிகவும் கஷ்டப்பட்டேன். என்னால் சரியாக **உட்கார முடியாது**. எங்கும் **பிரயாணப்பட்டு போகவும் முடியாது**. ஜெப வேளையில் ஒரு தேவ வல்லமை என்னை ஆட்கொண்டபோது, **மூல வியாதி** முற்றிலும் **சுகமானது**. – **சரவணி**, பெங்களூரு.

### ஒவ்வாமை நீங்கியது!



ஒரு வருடமாக என் கைகளிலும், கால்களில் இருந்த **தோல் ஒவ்வாமை**யினால் (Skin Allergy) மிகவும் கஷ்டப்பட்டேன். **ஊறல் தாங்காமல்** சொறிந்தால் **நீர் வடியும்**. ஜெப வேளையில் ஆவியானவரின் தொடுதலை உணர்ந்தேன். அந்நேரமே **பூரண சுகத்தை** பெற்றுக் கொண்டேன். – **அமராவதி,** நீலகிரி.

### (6 வருட) தலை வலி நீங்கியது!



சுமார் 6 **வருடங்களாக தீராத தலை வலி**யினால் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி, என் தலையில் நானே கை வைத்து ஜெபித்தேன். அப்பொழுது ஆவியானவருடைய தொடுதலை நான் உணர்ந்தேன். அந்நேரமே **தலை வலி நீங்கி**, சுகத்தை பெற்றுக் கொண்டேன். – **மகாலட்சுமி**, மூணார்.

### பூரண விடுதலை பெற்றேன்!

எனக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து, **அடிக்கடி தலை சுற்றல்** வந்து **மயங்கி விழுந்து** விடுவேன். சில நிமிடங்கள் கழித்துத்தான் சாதாரண நிலைமைக்கு வருவேன். எல்லா வித மருத்துவ



பரிசோதனையிலும் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றுதான் ரிசல்ட் வந்தது.

ஜெப வேளையில் கர்த்தருடைய கரம் என்னை தொட்டு, எனக்கு பூரண **சுகத்தை தந்தது**. அன்றுமுதல், இன்றுவரை எனக்கு **எந்தப் பிரச்சனையும் இல்லை. – சுஜின்**, கேரளா.

## அசுத்த ஆவிகள் வெளியேறி விடுதலை!

சுமார் **15 வருடங்களாக சர்ப்பத்தின் ஆவி**யினால் பாதிக்கப்பட்டிருந்தேன். நான் தூங்கும் போதெல்லாம் **என் பக்கத்தில் சர்ப்பம்** படுத்திருப்பதைப் போலவே இருக்கும். மட்டுமல்ல, ஒரு **தற்கொலையின் ஆவி**யினாலும் நான் பாதிக்கப்பட்டிருந்தேன். அந்த ஆவி அடிக்கடி என்னை **தற்கொலை செய்து கொள்ள தூண்டிக்** கொண்டே இருக்கும்.



ஜெப வேளையில் ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, எனக்குள்ளிருந்த அந்த **2 ஆவிகளும் வெளியேறிப்** போயிற்று. அன்றுமுதல், நான் **முழு விடுதலை**யோடு இருக்கிறேன்.
**– கலைச்செல்வி**, சென்னை.



**அசுத்த ஆவி**யின் போராட்டத்தினால், சுமார் **18 வருடங்களாக** பாதிக்கப்பட்டேன். அடிக்கடி என் **உடைகளை நானே கிழித்துக் கொள்வேன்**. தினமும் **இரவு தூக்க மாத்திரை சாப்பிட்டால்தான்** எனக்கு **தூக்கமே வரும்**. ஆரம்ப பாடல்-ஆராதனை வேளையிலேயே ஆவியானவர் என்னை ஆட்கொண்டபோது, எனக்குள்ளிருந்த அந்த **அசுத்த ஆவி வெளியேறிப் போயிற்று**.
**– விஜயா**, சென்னை.

## (5 வருட) மூட்டு வலி நீங்கியது!

சுமார் **5 வருடங்களாக மூட்டு வலி**யினால் (Arthritis) கஷ்டப்பட்டேன். யார் துணையும் இல்லாமல் **நடக்கவும் முடியாது, உட்காரவும் முடியாது**. திடீரென்று **எலும்புகள் செயல்படாமல்** போய் விடும். பல விதமான பரிசோதனைகளின் முடிவில், “வாழ்நாள் முழுவதும் நீங்கள் மருந்து-மாத்திரை சாப்பிட வேண்டும்.” என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்.



ஜெப வேளையில் ஒரு தேவ வல்லமை என்னை தொட்டு, **மூட்டு வலியை** முற்றிலுமாக **நீக்கி**, நல்ல **சுகத்தை** கொடுத்தது. **– ரெபேக்கா**, சென்னை.

**பாருங்கள்,** இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்!** உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

**நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.** நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, **விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து** உங்களுக்கும் அற்புதம் செய்து, **உங்கள் துக்கத்தை மாற்றுவார்.**

திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 – மதியம் 3:00 மணிவரை ஜெபிப்போம். **நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள்.** ஜெபத்தில் கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

– உங்கள் சகோதரன்.

**Address:**
**Standing in the Gap Prayer,**
**Nalumavadi-628 211,**
**Thoothukudi Dist., India.**

**உங்கள் அற்புதத்தின் நாள்:**

**நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெபம்!**

2026
**பிப்ரவரி**
**28**

(கடைசி சனிக்கிழமை)

நீலகிரி மாவட்ட செய்திகள்!

# ஊட்டியில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று!

## (அற்புதப் பெருவிழா—2026)




நீலகிரி மாவட்டத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், ஜனங்களின் விடுதலைக்காகவும் '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியத்தின் மூலமாக கடந்த (2025) அக்., 18,19 தேதிகளில், ஊட்டியிலுள்ள சி.எஸ்.ஐ., சி.எம்.எம்., மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் வைத்து **அற்புதப் பெருவிழா** மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இப்பெருவிழாவை நீலகிரி–'இயேசு விடுவிக்கிறார்'– ஊழியத்தை சார்ந்த சகோ. **கிறிஷ்டோபர்**, சகோ. **ஜார்ஜ்** மற்றும் தேவ பிள்ளைகள் மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். 2 நாட்களும் நீலகிரி மாவட்டம் முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவிடமிருந்து அற்புதங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்வதற்காக, மிகுந்த எதிர்பார்ப்போடு வந்திருந்தார்கள்.

முதல் நாள் செய்தி வேளையில் நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், **"உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்!"** என்கிற தலைப்பில், பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 18 வருடங்களாக வியாதியோடு இருந்த ஒரு பெண்ணை இயேசு கிறிஸ்து குணமாக்கிய உண்மை சம்பவத்தின் அடிப்படையில் தேவ செய்தியை பகிர்ந்து கொண்டு, வந்திருந்த ஜனங்களின் சுகம் மற்றும் விடுதலைக்காக ஜெபத்தை ஏறெடுத்தபோது, அனேகர் தங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்வதற்காக மேடைக்கு முன்பாக வந்து அர்ப்பணித்து ஜெபித்தார்கள். அப்போது ஜனங்கள் மத்தியில் தேவ வல்லமை பலமாக வெளிப்பட்டதினால், அனேகர் அற்புத சுகம் மற்றும் விடுதலையை பெற்றுக் கொண்டார்கள்.



2வது நாள் செய்தி வேளையில் **நமது சகோதரர்** அவர்கள், 38 வருடங்களாக வியாதிப்பட்டிருந்த ஒரு மனிதனை இயேசு கிறிஸ்து குணமாக்கிய உண்மை சம்பவத்தின் அடிப்படையில் தேவ செய்தியை மிகுந்த மனதுருக்கத்தோடும், கண்ணீரோடும் பகிர்ந்து கொண்டபோது, ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் இருதயம் உடைக்கப்பட்டு, மிகுந்த கண்ணீரோடு தேவ செய்தியை கவனித்து கேட்டார்கள்.

ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை பலமாக பொழிந்தருளப்பட்டபோது, அனேகர் அற்புத சுகம் மற்றும் விடுதலையை பெற்றுக் கொண்டார்கள். அவர்களில் சிலர் மேடையேறி சாட்சி சொல்லி, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

கூட்டம் நடைபெற்ற 2 நாட்களும் நீலகிரி மாவட்டத்திற்கு கனமழை எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருந்தாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூட்டம் நடைபெறுவதற்கு எந்த விதமான தடையும் வராதபடி நல்ல கால சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்து, நீலகிரி மாவட்டம் முழுவதிலுமிருந்து திரளான ஜனங்களை கொண்டு வந்து, அவர்களில் பாவத்திலும், சாபத்திலும், பிசாசின் பிடியிலும் அகப்பட்ட அனேகரை விடுதலையாக்கி, அவர்களுடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றினார்! கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! – ஒருங்கிணைப்பாளர்.

**ஊட்டி – அற்புதப் பெருவிழாவில்**

## இயேசு கிறிஸ்து எழுப்பிய திரளான சாட்சிகளில் சில...

### குருட்டு கண் திறந்தது!

என் மகளுடைய வலது கண்ணில் சிறு வயதிலிருந்தே ஒரு பிரச்சனை இருந்தது. சமீபத்தில் **6 மாதங்களாக** அந்த **கண்** முற்றிலுமாக **பார்வையை இழந்து போயிற்று**. ஜெப வேளையில், அவளுடைய தலையில் நான் கை வைத்து ஜெபித்தபோது, ஒரு தேவ வல்லமை அவள் மீது இறங்கியது. அந்த வினாடியே அந்த **குருட்டு கண்ணில்** தெளிவான **பார்வை வந்து விட்டது.**



– **சபிதா**, கூடலூர்.

### (20 வருட) கண்களில் நீர் வடிவது நின்றது!


சுமார் **20 வருட**ங்களாக என் **கண்களில் நீர் வடிந்து கொண்டே** இருக்கும். டாக்டர், "ஆபரேஷன் பண்ண வேண்டும்." என்று சொன்னார். ஜெப வேளையில், ஆவியானவரின் அபிஷேகம் என்னை அளவில்லாமல் நிரப்பியது. அந்நேரமே கண்களில் **நீர் வடிவது நின்றது**.



– **சகாய மேரி**, ஊட்டி.



## (18 வருட) கட்டி மறைந்தது!



என் இடது **காலில்** இருந்த ஒரு **கட்டியினால்**, சுமார் **18 வருட**ங்களாக **வேதனை**ப்பட்டேன். ஜெப வேளையில் ஜெபித்து முடித்து விட்டுப் பார்த்தபோது, அந்த **கட்டி மறைந்து** போயிருந்தது. – **ராபர்ட்**, ஊட்டி.

## பயத்தின் ஆவி வெளியேறி விடுதலை!

ஒரு **பயத்தின் ஆவி**யினால் **2 மாத**ங்களாக கஷ்டப்பட்டேன். அடிக்கடி **தனியாக அமர்ந்து அழுது** கொண்டே இருப்பேன். 'எதற்காக அழுகிறேன்?' என்று எனக்கே தெரியாது.



ஜெப வேளையில், ஆவியானவரின் வல்லமை என் மீது இறங்கியது. அந்நேரம் எனக்குள் இருந்த **பயத்தின் ஆவி விலகி, விடுதலை**யை பெற்றுக் கொண்டேன். – **ஜோதிகா**, அம்பத்துறை.

## (6 வருட) மூல வியாதிசுகமானது!



சுமார் 6 **வருட**ங்களாக **மூல வியாதி**யினால் **வேதனை**ப்பட்டேன். ஜெப வேளையில், ஆவியானவர் என்னை பலமாக ஆட்கொண்டபோது, **மூல வியாதி சுகமாயிற்று**. – **சாந்தினி**, ஊட்டி.

## (18 வருட) பிரச்சனை தீர்ந்து, சுகம்!

சுமார் **18 வருட**ங்களாக என் **2 கால்களிலும் பெல்ட் போட்டு**த்தான் என்னால் நடக்க முடிந்தது.



ஜெப வேளையில், ஆவியானவரின் தொடுதலை நான் உணர்ந்தேன். அதற்கு பிறகு **பெல்ட் இல்லாமல் நடக்க முடிகிறது**. – **பீனா**, கன்னியாகுமரி.

## (10 வருட) கர்ப்பப் பையில் கட்டி மறைந்தது!



ஒரு வித **பயத்தின் ஆவி**யினால் நான் பாதிக்கப்பட்டேன். மட்டுமல்ல, சுமார் **10 வருட**ங்களாக என் **கர்ப்பப் பையில்** இருந்த **கட்டி**யினாலும் **வேதனை**ப்பட்டேன்.

ஜெப வேளையில் தேவ வல்லமை என்னை ஆட்கொண்டபோது, எனக்குள்ளிருந்த **பயத்தின் ஆவி வெளியேறி**ப் போயிற்று. கர்ப்பப் பையிலிருந்த **கட்டியும் மறைந்து**, பூரண **விடுதலை**யோடு இருக்கிறேன். – **கமலா**, மைசூரு.

## (10 வருட) புற்று நோய் கட்டி மறைந்தது!



என் வலது கை விரலில் சுமார் **10 வருட**ங்களாக ஒரு **புற்று நோய் கட்டி** இருந்தது.

ஜெப வேளையில் அந்த கட்டியின் மீது நான் கை வைத்து ஜெபித்தேன். கர்த்தர் அந்த **கட்டியை மறைய**ப் பண்ணினார். – **நாகம்மாள்**, அன்னூர்.

## (32 வருட) ஆஸ்துமா சுகமானது!



சுமார் **32 வருட**ங்களாக **ஆஸ்துமா**வினால் பாதிக்கப்பட்டிருந்தேன்.

ஜெப வேளையில், தேவ வல்லமை ஒரு வெளிச்சத்தைப்போல என் மீது விழுந்தது. அந்நேரமே **ஆஸ்துமா நீங்கி**, பூரண **சுகத்தை பெற்று**க் கொண்டேன். – **சரோஜா**, முத்தாரை.

## (8 வருட) முடக்கு வாதம் நீங்கியது!



**முடக்கு வாதத்தினால்** என் **கைகளை நீட்ட முடியாமல், உயர்த்த முடியாமல்** சுமார் **8 வருட**ங்களாக கஷ்டப்பட்டேன்.

ஜெப வேளையில் ஒரு தேவ அபிஷேகம் என்னை தொட்டது. அந்த வினாடியே **முடக்கு வாதம் நீங்கி**, சுகத்தை பெற்றுக் கொண்டேன். – **பங்கஜம்**, ஊட்டி.

**இஸ்ரேல் எழுப்புதல் ஜெப சுற்றுலாவுக்கான ஓர் அறிவிப்பு!**

(2026 **மே 8** முதல், **18**ம் தேதி முடிய)

**இதன் மற்ற முழு விபரங்கள் அடுத்த மாத பத்திரிக்கையில் தெரிவிக்கப்படும்.**

தொடர்புக்கு: **93441 81949.**





**தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த பெண்களுக்காக...**

**நாலுமாவடி** – தேவனுடைய கூடாரத்தில்



'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்கள் நடத்தும்

**தெபொராளே, எழும்பு!**

**பெண்கள் எழுப்புதல் ஜெபக் கூடுகை!**

நாள்: 2026 **பிப்ரவரி 21** (சனி)



தேவ செய்தியும், ஜெபமும்:
**சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்.**

இடம்: தேவனுடைய கூடாரம், மோசே அரங்கம்.

நேரம்: **காலை 10:00 - மாலை 3:00.**

தெபொராள் எழுப்புதல் தரிசன பகிர்வு:
**சகோதரி அனிதா பானு,**
**சகோதரி வசந்தி பால்.**

**தெபொராளே, தேசத்தின் எழுப்புதலுக்காக தீர்க்கதரிசியாக எழும்பி ஜெபிக்க வாருங்கள்!**

தொடர்புக்கு: 94873 37305 | 04639-35 35 35.



**பெரம்பலூர் - உலக எழுப்புதல் ஜெப மையம்**

**முகவரி மாற்றம்!**

**பழைய முகவரி**

~~71, MK Complex, Venkatesapuram,~~
~~Perambalur-621 212.~~
~~Ph: 04328-22 44 28 / 97887 88512.~~

**புதிய முகவரி**

**Ground Floor, Gounder Street,**
**Near Asvin's Sweets, Opp: New Bus Stand,**
**Perambalur-621 212. Ph: 94866 75315.**


"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது." சங்கீதம் 116:15.

## சகோ. S. ஜாண் பன்னீர்செல்வம்.



(1957 - 2026)

நமது **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்தில் **41 வருடங்களாக** எங்களோடு கூட கர்த்தருக்காக உழைத்த **மூத்த தேவ ஊழியர்**, அன்பு சகோதரர் **S. ஜாண் பன்னீர்செல்வம்** அவர்கள், கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை வெற்றிகரமாக முடித்து, (2026) **ஜனவரி 10**ம் தேதியன்று தன்னுடைய வீட்டிற்கு [இளைப்பாறுதலுக்குள்] கடந்து போய் விட்டார்கள்.

சகோதரர் அவர்களுடைய சாட்சியுள்ள வாழ்க்கைக்காக, அவர் செய்து முடித்த ஊழியங்களுக்காக **கர்த்தரை துதிக்கிறோம்!** சகோதரர் அவர்களுடைய **மனைவி** மற்றும் **மகன்** நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்காக **ஜெபித்து கொள்ளுங்கள்.** – உங்கள் சகோதரன்.

# செய்திகள்!

## மனித உயிருக்கு உலை வைக்கும் கலப்பட உணவு பொருட்கள்!



இன்றைய வாழ்க்கை சூழலில், **மனிதர்கள் பல்வேறு** விதமான **நோய் பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர்.** இதற்கு அன்றாடம் நாம் பயன்படுத்தும் **உணவுப் பொருட்களில் சேர்ந்துள்ள கலப்படம்** ஒரு முக்கிய காரணமாகும். இன்றைக்கு, 'எது சுத்தமானது? எது கலப்படம்?' என்று நம்மால் உணர முடியாத அளவுக்கு கலப்படங்கள் நடைபெற்று வருகிறது.

இது குறித்து நுகர்வோர் கூட்டமைப்பு குழுக்களின் நிர்வாகிகள் கூறியதாவது:

"**அரிசி**யில், '**சிறு கற்கள்**', '**மணல்**', '**நெல்**', '**தவிடு**' கலக்கப்படுகிறது. இது, அதிகளவில் **வயிற்றுக் கோளாறு**களை உண்டாக்குகிறது. **துவரம் பருப்பில்**, '**கேசரி பருப்பு**' மற்றும் '**சிறு கற்கள்**' கலக்கப்படுவது, **வயிற்றுக் கோளாறு**டன் **வாத நோய்**க்கும் வழி வகுக்கிறது.

**உளுந்தம் பருப்பில்**, '**களிமண் உருண்டை**', '**சிறு கற்கள்**' கலக்கின்றனர். இது, '**வயிற்று உபாதை**', '**புற்று நோய்**', '**கருச் சிதைவு**' போன்ற அபாயங்களுக்கு வழி வகுக்கிறது. **மிளகாய் தூளில்**, '**செங்கல் பொடி**', '**காங்கோரெட்**' போன்றவை கலக்கப்படுகிறது.

**மல்லித் தூளில்**, '**மரத் தூள்**', '**குதிரை சாணம்**', '**மலாசிட் பச்சை வேதிப் பொருட்கள்**' கலக்கப்படுகிறது. **நெய்யில்**, **வனஸ்பதி**யும், **மிருகக் கொழுப்பு**ம் கலக்கப்படுகிறது. **வெண்ணெயில்**, '**மைதா**' மற்றும் '**மணிலா மாவு**' கலக்கப்படுகிறது. இது, '**இருதய அடைப்பு**', '**முக வீக்கம்**' போன்ற பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும்.

**தேனில்**, '**சர்க்கரை**' மற்றும் '**வெல்லப் பாகு**' கலக்கப்படுவதால், **உணவின் சத்து கெட்டு**ப் போவது மட்டுமல்லாமல், '**நெஞ்சு வலி**' மற்றும் '**வயிற்றுப் போக்கு**' போன்ற பாதிப்புகளுக்கு வழி வகுக்கும். **ஆப்பிள் பழங்களின் மீது** '**மெழுகுப் பூச்சு**' பூசுவது, **கார்பைடு கல்**லின் மூலமாக **மாம்பழங்களை பழுக்க வைப்பது** போன்றவற்றால், **பழங்கள் விஷமாகவே மாறி** விடுகின்றன!

இப்படியாக அரிசியில் துவங்கி, மனிதர்கள் உண்ணும் அனைத்து பொருட்களிலும், ஏதாவதொரு வகையில் கலப்படம் இருக்கிறது. இது மனிதர்களின் உடல் நலத்தை பாதிப்பதோடு, சில சமயங்களில் **உயிருக்கே உலை வைத்து விடுகிறது!**" என்று கூறியுள்ளனர்.

### பருப்பு மற்றும் மஞ்சள் தூளால் பெரும் நோய் பாதிப்பு!

பருப்பு வகைகளை பொறுத்த வரையில், '**கேசரி பருப்பு**' என்பது, பிரதானமாக உள்ளது. **பால் கெட்டியாக இருக்க ஜவ்வரிசி மாவை** கலக்கின்றனர். இது போன்ற **கலப்படங்கள் சிறுநீரக பாதிப்பு**களை உருவாக்குகிறது.

இதேபோல் **மஞ்சள் தூளில்** கலக்கும் '**காரியகுரோமேட்**' மற்றும் '**மெட்டானில் எல்லோ**' போன்ற வேதிப் பொருட்கள் மிகவும் **அபாயம் நிறைந்தவை.** இவற்றை மஞ்சள் தூளில் கலப்பதால், **நுரையீரல், தொண்டை, மார்பு, கண்** மற்றும் **எலும்புகளில் பாதிப்புகள்** ஏற்படுகிறது. **கல்லீரலில் கட்டி**களும் உருவாகிறது. அது மட்டுமன்றி, **ஆண் மலட்டுத் தன்மை, கருச் சிதைவு** மற்றும் **புற்று நோய் பாதிப்பு**களுக்கும் இது வழி வகுத்து விடும்!" என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

### இந்த வழியை பின்பற்றலாம்!

"டீ-தூளை தண்ணீரில் கலந்து, ஒரு 4 துளிகளை பேப்பரில் விடும்போது, அதிலிருந்து சிவப்பு நிறம் தனியாக பிரிந்து வந்தால், அது தரமான 'டீ-தூள்! மிளகை தண்ணீருக்குள் போட்டவுடன் மூழ்கினால், அது தரமான மிளகு! மாறாக, தண்ணீரின் மேற்பரப்பில் மிதந்தால், அது பப்பாளி விதை! சிறிதளவு பாலுடன் அதே அளவு தண்ணீரை ஒரு பாட்டிலில் ஊற்றி நன்றாக கலக்கும்போது, அது நுரைபோல் தேங்கினால், அது கலப்படம்! ஒரு ஸ்பூன் அளவு மிளகாய் தூளை ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு கலக்கும்போது, பளீர் சிவப்பு நிறம் வெளி வந்தால், அதில் '**சூடான் டை**' என்னும் **இரசாயனம் கலந்திருக்கிறது** என்பது உறுதி!" என்றும் உணவுப் பொருள் ஆய்வு நிபுணர்கள் கூறுகிறார்கள்.

(நன்றி: 'தினகரன்', 2026 ஜனவரி 2, பக். 14).

**(தேசத்தை பாழ்படுத்துகிற கலப்படப் பொருட்கள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு, ஆரோக்கியமான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட பாரத்தோடு ஜெபிப்போம்.)**

'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின்

உலகளாவிய இந்த எழுப்புதல் திட்டத்தில்

# நீங்களும் பங்காற்றலாம்!

நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்கென்று காணிக்கை அனுப்ப விரும்புகிறவர்கள்,

**கீழ்கண்ட வழி முறைகளில் காணிக்கை அனுப்பலாம்.**

UPI Pay through UPI

1) Account Name: JESUS REDEEMS

UPI Id: JESUSREDEEMS@SBI

G Pay, Paytm, PhonePe, BHIM

2) இணையதளம் (Website): www.jesusredeems.com

3) Bank Transfer:

| | |
|---|---|
| Bank Name | : Tamilnad Mercantile Bank Ltd., |
| Branch | : Nalumavadi. |
| A/C Name | : Jesus Redeems. |
| A/C No. | : 4491 50310 875001. |
| IFSC Code | : TMBL0000449. |

4)

| | |
|---|---|
| காசோலை (Cheque): | Jesus Redeems. |
| வரைவோலை (Demand Draft): | Jesus Redeems (or) Mohan C. Lazarus. |

5) மணியார்டர் E.M.O.

*To Address:* Bro. Mohan C. Lazarus, Jesus Redeems, Nalumavadi - 628211, Thoothukudi Dist., T.N., India.

காணிக்கை அனுப்பிய பின்பு, அதைக் குறித்த விபரத்தை **89038 35315** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு **WhatsApp** மூலமாகவோ, அல்லது **accounts@jesusredeems.org** மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.



**வியாபாரம்** மற்றும் **தொழில் செய்கிறவர்களுக்காக**

நாலுமாவடி, தேவனுடைய கூடாரத்தில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்!

நாள்: 2026 **மார்ச் 14** (2வது சனி)

நேரம்: **காலை 9:00-மதியம் 3:00.**

**உங்கள் தொழில் மற்றும் வியாபாரங்களின் ஆசீர்வாதங்களுக்காக தேவ செய்தியளித்து, விசேஷித்த ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்.**



தேவ செய்தியும், ஜெபமும்:

சகோ. **மோகன் சி. லாசரஸ்.**

தொடர்புக்கு: **04639-35 33 33.**

Registered with Registered News Paper of India No: 42579/83.
Postal Registration No: TTN/145/2024-2026
Overseas Registration No: TTN/241/2024-2026
Licensed to Post Without Prepayment No: TN/WPP-33/SR/2024-2026
Date of Publication: 25-01-2026.
Date of Posting: 27th to 30th of every month.
Office of Posting: BPC, Tuticorin HO - 628 001.

கர்நாடகா மாநிலத்தில், 'இயேசு விடுவிக்கிறார்'

# சமாதானப் பெருவிழாக்கள்!



**பெங்களூருவில்...**

2026 **மார்ச்**

**7,8.** (சனி, ஞாயிறு)

நேரம்: **மாலை 6:00 மணிக்கு**

இடம்: Palace Ground,
Gate No: 2, Thirupura Vasani,
Near Mekhri Circle, Airport Road,
Bengaluru.

**உடுப்பியில்...**

2026 **மார்ச்**

**20,21,22.**
(வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம்: **மாலை 6:00 மணிக்கு**

இடம்: Christian PU College Ground,
Mission Compound, Udupi.

தேவ செய்தியும், ஜெபமும்: **சகோ. மோகன் சி. லாசரஸ்.**

**பாவப் போராட்டமா? வியாதியின் வேதனையா? பிசாசின் கட்டுகளா? கவலையா? கண்ணீரா? கடன் பிரச்சனையா? வாருங்கள்! பங்கு பெறுங்கள்! உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்!**

தொடர்புக்கு: 96328 14414,
080-35 45 45 45, 95910 77110.

தொடர்புக்கு: Fellowship of Udupi District
Churches- 97405 16397 I 98806 67036.

**இயேசு விடுவிக்கிறார்,**
நாலுமாவடி - 628 211,
தூத்துக்குடி மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா.

எமது முகவரி:
Office: (+91) 04639-35 33 33
Email: prayer@jesusredeems.org
Vist: www.jesusredeems.com

உங்கள் அவசர ஜெப
அழைப்பிற்கு 24 மணி நேரமும்
(+91) 04639-35 35 35 (அல்லது) 22 00 00
என்ற இந்த எண்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களது அவசர ஜெபக் குறிப்புகளை 24 மணி நேரமும் Whatsapp மூலமாக தெரியப்படுத்த,
**+ 91 94 88 17 53 15.**
(இந்த எண்ணை ஜெபக் குறிப்புகளை அனுப்ப மட்டுமே பயன்படுத்தவும்.)

Our Website

Owned and Published by Bro. Mohan C. Lazarus, Printed by Sis. Joyce Lazarus at Nalumavadi - 13/81, Lakshmipuram, Angel Press and released through Nalumavadi-Jesus Redeems. Editor: Bro. Mohan C. Lazarus